முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 27.11.2024

O.S. 266/2014

வா.சா.1 – சதாசிவம்

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு 49 வயது. நான் பி.எ படித்துள்ளேன் இருசக்கர வாகனம் எமகா டீலர்சிப் வைத்துள்ளேன். 1ம் வாதி என் தாயார் ஏன் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் என் தாயாருக்காகவும் நான் வந்துள்ளேன். என் தாயாருக்கு 64 வயது ஆகிறது. என் தாயாருக்கு குடும்ப விவரங்கள் என்னைவிட கூடுதலாக தெரியும் என்றாலும் அவர் வந்தால் உண்மை தெரிய வரும் என்பதால் அவரை விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து என் பெயரில் இருப்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 1ம் பிரதிவாதி என் பாட்டி என் அம்மாவின் அம்மா ஆவார்.

1ம் பிரதிவாதி தற்போது உயிருடன் இல்லை தவறிவிட்டார் அவர் இறந்த தேதி நினைவில்லை. என் தாத்தா சதாசிவமும் தவறிவிட்டார். என் பாட்டி இறப்பதற்கு முன்பு என் தாத்தா இறந்து விட்டார் என் தாத்தா இறந்த தேதி தெரியாது. என் தாத்தா மற்றும் பாட்டியின் வாரிசுதாரர்கள் 1,4,5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி அவர்களில் மூத்த குழந்தை, என் தாயார் 2 வது குழந்தை 3 வது குழந்தை 4 வது பிரதிவாதி ஆவார். என் பாட்டி டி.வி.டி காலனியில் உள்ள 3 வது தெரு கதவு எண்.2 எ வீட்டில் இருக்கும்போது இறந்தார். என் தாத்தாவும் அதே வீட்டில் வசித்தபோது இறந்தார் இறந்த சமயம் மருத்துவமனையில் வைத்து இறந்தார். என் பாட்டி முன்பே நிறைய வசதி உடையவர் என்றால் சரிதான். என் தாத்தாவிற்கும் வசதி உண்டு என்றால் ஆம்.

1ம் வாதி மற்றும் 5ம் பிரதிவாதி 10ம் வகுப்பு வரை படித்துள்ளார்கள். 4ம் பிரதிவாதி பி.எ. படித்துள்ளார்.என் தாயாரின் திருமண தேதி எனக்கு தெரியாது. என் தாயாருக்கு என் தாத்தா பாட்டி திருமண சமயத்தில் எவ்வளவு நகை பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் பணம் கொடுக்கவில்லை நகை போட்டுள்ளார்கள் எவ்வளவு நகை என்று எனக்கு தெரியாது. என் உடன்பிறந்தவர்கள் என் தங்கை அதன்பின் ஒரு தம்பி. நான் பிறந்த தேதி 13.6.1975. என் தங்கை சண்முக பிரியா 29.5.1983 ல் பிறந்தார். என் தம்பி ராஜா 10.6.1987 அன்று பிறந்தார்.